
# என் பேனாவின் நிதர்சனம்

சமரபாகு சீனா உதயகுமார்



# என் பேனாவின் நிதர்சனம்

(கவிதைத் தொகுதி)

சமரபாகு சீனா உதயகுமார்

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : என் பேனாவின் நிதர்சனம் |
| வகை | : கவிதைகள் |
| ஆசிரியர் | : சமரபாகு சீனா உதயகுமார் |
| பதிப்பு விபரம் | : முதற்பதிப்பு - செப்ரெம்பர் 2013 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| ஆசிரியர் முகவரி | : கூனந்தோட்டம்,<br>சமரபாகு,<br>வல்வெட்டித்துறை.<br>தொ.பே. : 0783015144<br>மின்னஞ்சல் : uthayan7@gmail.com |
| பதிப்பு | : மீரா பதிப்பகம்<br>(101 ஆவது பதிப்பு)<br>கொழும்பு 06. |
| அச்சிட்டோர் | : தரஞ்சி பிரின்ட்ஸ்,<br>நாவின்ன, மஹரகம. |
| விலை | : 200/- |
| **ISBN** | : **978-955-53921-6-7** |

# சமர்ப்பணம்

தமிழ் இறைவனுக்கு

இருப்பதற்கான ஆதாரம் இல்லை என்பதால்

வரமாட்டார் என்கிறார்கள்!

இல்லை என்பதற்கான ஆதாராம் இல்லை என்பதால்

வருவார் என்கிறார்கள்!

எதுவானாலும் சரி

அந்த வார்த்தையைச் சொன்னால்தான்

எம் இனத்திற்கு உயிரோட்டம் என்றால்

உரக்கச் சொல்லுவோம்

வருவார்...

# நன்றிக்குரியவர்கள்

ஞானசேகரன், டொமினிக் ஜீவா, விசு கருணாநிதி

புலோலியூர் இரத்தினவேலோன், ரேணுகா பிரபாகரன்,

முல்லை அமுதன், பாவலர் அறிவுமதி,

பாடலாசிரியர் பழநிபாரதி, இயக்குனர் மு.களஞ்சியம்,

ரீங்கார நாயகன் ரீ.எஸ்.முகுந்தன், தேவராஜா துஷ்யந்தன்,

ஞானம், மல்லிகை, இருக்கிறம், வீரகேசரி, தினக்குரல்,

காற்றுவெளி (இணைய சஞ்சிகை)

இலங்கை சூரியன் FM, இது நம் தேசம்.

# ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன் வழங்கிய முன்னுரை

"என்பேனாவின் நிதர்சனம்" என்ற சமரபாகு சீனா உதயகுமாரின் இந்தக்கவிதைத் தொகுதியில் உள்ள இருபத்தொரு கவிதைகளில் அனேகமான கவிதைகள், "ஞானம்" சஞ்சிகையில் பிரசுரமானவை. ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் என்ற நிலையில் இக்கவிதைகளை நான் ஏற்கனவே உதிரியாக வாசித்திருக்கிறேன். தற்போது மீண்டும் ஒரு தொகுப்பாக ஒன்று சேர வாசிக்கும் போது இக்கவிதைகளில் ஒரு பொதுமைப்பாட்டைக் காணமுடிகிறது. அதேவேளை இக்கவிதைகளின் பாடுபொருட்களை வகுத்தும் தொகுத்தும் சில பரிமாணங்களை நோக்கமுடிகிறது.

இக்கவிதைத் தொகுதியில் உள்ள அத்தனை கவிதைகளும் புதுக்கவிதைகள். ஒரு கவிஞன் தனது எண்ணங்களை வெளிப்படுத்த இலக்கணம் தடையாக இருப்பதாக உணரும் போது அவன் கவிதை இலக்கண மரபை மீறுகிறான். அப்போது அது புதுக்கவிதை ஆகிறது. தனது எண்ணங்களை எண்ணியபடி வெளிப்படுத்த புதுக்கவிதை வடிவம் அவனுக்குக் கைகொடுக்கிறது. ஆனாலும் முற்றுமுழுதாக கவிதை இலக்கண மரபிலிருந்து விலக இயலாதவாறு உவமைகள், குறியீடுகள், படிமங்கள், ஓசை நயம், உருவகம் போன்ற மரபுக்கவிதைகள் தரக்கூடிய இலக்கிய இன்பங்கள் புதுக்கவிதைக்குள்ளும் அமைந்து கவிதை இயல்புடன் புதுக்கவிதையாகிறது.

இன்றைய காலகட்டத்தில் கவிஞர்கள் பலரும் புதுக்க விதையாளர்களாகவே தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். புதுக்கவிதையில் எதனையும் பாடுபொருளாகக் கொள்ளலாம். எப்படியும் பாடலாம் என்ற வசதியிருக்கிறது. கவிஞனின் உணர்ச்சி வெளிப்பாட்டிற்குப் புதுக்கவிதை முதன்மை அளிக்கிறது.

தமிழ் இலக்கியமானது சங்ககாலம் முதல் காலச் சூழலுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு கால கட்டத்திலும் வகைமை, வடிவம், பாடுபொருள், வெளியீட்டு முறைமை போன்றவற்றில் மாற்றம் கொண்டு வளம் பெற்று வந்துள்ளது. இவ்வகையிலேயே புதுக்கவிதையும் இன்றைய தமிழுக்கு அணி சேர்க்கிறது.

சமரபாகு சீனா உதயகுமார் சிறுகதை, கட்டுரை, குறுநாவல் விமர்சனம் கவிதை ஆகிய துறைகளில் எழுதிவருகின்ற போதிலும் அவரது கவிதைகளே அவரை முதன்மை இடத்துக்குக் கொண்டுசெல்கின்றன என நான் கருதுகிறேன். அவரது இலக்கியக் கொள்கை, சமுதாயப் பார்வை, மனித மேம்பாட்டிற்கான அவரது சிந்தனைப்போக்கு போன்றவற்றை அவரது கவிதைகளில் தரிசிக்க முடிகிறது. அந்தவகையில் அவர் கவனத்துக்குரிய புதிய தலைமுறைக் கவிஞராகிறார்.

தமிழ்கூறு நல்லுலகில் எந்தத் தமிழர்களும் அடைந்திராத போர் நெருக்கடிகளை ஈழத்தமிழர்கள் அனுபவித்திருக்கிறார்கள். அவற்றைப் பின்புலமாகக் கொண்ட இலக்கியங்கள் நமது படைப்பாளிகளிடமிருந்து பிறந்திருக்கின்றன. இதன் காரணமாக தமிழ் இலக்கிய வரலாற்றில் ''போர் இலக்கியம்'' என்று தனியாக வகைப்படுத்தி நோக்கக் கூடிய பின்புலத்தை

யும் நியாயப் பாட்டையும் ஈழத்து இலக்கியம் பெற்றிருக்கிறது. ஈழத்து இலக்கியத்தடம் போர் இலக்கிய மரபு சார்ந்த பொருள் கோடலுக்கு உட்பட்டுள்ளது என்பதும் நவீன தமிழ் இலக்கியத்தில் ''போர் இலக்கியம்'' என்றொரு தனியான வகைப் பாட்டை உருவாக்கிய பெருமையும் எமது நாட்டுப் படைப் பாளிகளையே சாரும்.

போர் இலக்கியத்தின் முக்கிய பரிமாணம் அவை போரின் சாட்சியங்களாக அமைவதுதான். போர்க்காலத்தில் இடம்பெற்ற பெரும்பாலான விடயங்கள் போர் இலக்கியங்கள் மூலமே வெளிக்கொணரப்படுகின்றன. அவை போர்க்கால நிலைமைகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதோடு எதிர்காலச் சந்ததியினருக்கும் கையளிப்பனவாய் அமைகின்றன. காலங்கடந்து நின்று மக்கள் துயரங்களையும் இழப்புகளையும் வெளிப்படுத்தி உலகின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பியவண்ணம் யுத்தத்தின் சாட்சியங்களாக அமைகின்றன.

இத் தொகுதியில் உள்ள சமரபாகு சீனா உதயகுமாரின் கவிதைகள் பலவும் போர் இலக்கியம் சார்ந்த கவிதைகளாகக் காணப்படுகின்றன. போரின் அவலங்களையும் கொடுமைகளையும் துன்ப துயரங்களையும் இக்கவிதைகள் பாடுபொருளாகக் கொண்டுள்ளன.

கவிதையானது சமூகத்தை வழிநடத்தியும் செல்ல வேண்டும். சமுதாய உணர்வுடன் ஒன்றிப்போகும் கவிஞனுக்கு அத்தகைய படைப்புகள் இயல்பானதே. போரின் கொடுமையில் துவண்டு விடும் மக்களைச் சோர்வடைந்து விடாது குறிக்கோளில் பற்றுறுதியுடன் இருக்கவேண்டும் என்பதை ''எங்களால் மட்

டுமே முடிகிறது'' என்ற கவிதையில் கவிஞர் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

வென்றவர்கள்
வலுக்கட்டாயம் தருவர்
வலிகளை வலுவாக்குவர்
இரும்புப் பேயாகி
ஆக்கிரமித்து அழிப்பர்

அப்போது கூட
கொள்கை தேசப்பற்று
உண்மை இனவுணர்வு
இவையெல்லாம்
எம்மிலிருந்து பிரிவதில்லை காண்!

காலத்தின் மனச் சாட்சியாக இருப்பவன் கவிஞன். போரில் ஈடுபட்ட சிங்களச் சிப்பாய்கள் பலர் தமது குடும்பத்தின் வறுமையைப் போக்கவே துப்பாக்கி தூக்கினார்கள். தமது உறவுகளான அப்பா, அம்மா சகோதரர்களின் நல்வாழ்வுக்காகவே இரவு, பகல் மழை வெய்யில் பாராது இரும்புக் குழல் துப்பாக்கிகளுடனும் ஊமல்வடிவக் குண்டுகளுடனும் மனதில் உறவுகளுக்கான ஏக்கத்துடனும் உழலும் சிப்பாய்களின் நிலைமையை பின்வருமாறு பதிவு செய்கிறுர். இங்கே காட்சி அனுபவமும் உணர்வு அனுபவமும் ஒன்றி இரண்டு பரிமாணங்களாகி மூன்றாவதான ஓர் ஆழத்துக்குச் செல்கிறது கவிதை.

இந்தப் போராட்டம் எனக்கும் பிடிக்கவில்லை
இருந்தும்
என் வீட்டு அடுப்பங்கரைப் பூனைகளை
கலைத்தெறியும் ஒரு தருணம்
எனக்கும் ஒரு சந்தர்ப்பமாய் வந்தவேளை
இராணுவ சிப்பாய் பதவி பிடித்து
இங்கு வந்தேன் நானும்!

வயதுக்கு வந்து
பத்து வருடங்களாகி வந்தன
கல்யாண வரனின் வரவு பார்த்து
நாளும் பெருமூச்செறியும்
ஆசைத் தங்கைகள் இருவர்

தோள்களில் துப்பாக்கி கனக்க
மனதும் இறுகி வலிக்க
காட்டிலும் மேட்டிலும்
மழையிலும் வெயிலிலும்
நாடு காக்கும் போர் வீரன்
எனும்
ஒரு போர்வை உடுத்தவனாய்

இன்னும்
ஏங்கிப் பெருமூச்செறிந்து

வெயிலில் தோய்ந்து குளிக்கிறது
இழகிய என் நெஞ்சு
அழகிய என் உறவுகளுக்காய்!

எந்தக் கவிஞனும் அவனவன் சமூகத்தின் அங்கம்தான். அச்சமூகத்தின் பாதிப்பு அவனையும் பாதிக்கத்தான் செய்கிறது. அந்தப் பாதிப்புக்கு அவன் எதிரொலிக்கும் முறையிலும் அவனது பார்வை கவித்துவப் பார்வையாக இருக்கும்போதும் சமூக அக்க றையுடன் கூடிய தரமான கவிதைகள் பிறக்கின்றன. ''என் பிஞ்சுப் பிரபஞ்சத் தம்பியும் நானும்'' அத்தகைய கவிதைகளில் ஒன்று. தாய் தந்தையரைப் போரில் பறிகொடுத்த சிறுமி ஒருத்தி தன் பிஞ் சுத் தம்பியின் வயிற்றுப் பசி போக்க பிச்சைப் பாத்திரம் ஏற்கும் காட்சி இவரது கவிதை வரிகளில் நெஞ்சை உருக்குகிறது.

முகம் சிதறுண்ட அம்மாவும்
குடல் வெளிவந்து
தண்ணி தண்ணி என்று
அனுங்கி மடிந்த அப்பாவும்
இன்னமும் என் கண்களில்தான்

என் வகுப்புப் பிள்ளைகள்
அழகாகப் பள்ளி போகின்றனர்
பிள்ளைகளோடு பிள்ளைகளாக
கைவீசி நடந்து பள்ளி செல்லவும்
கலகலப்பாகப் பாடங்கள் படிக்கவும்
ஆவல் பிறக்கிறது எனக்கும்

ஆனாலும்
வலதுகரத்தில் பிஞ்சுப் பிரபஞ்சத் தம்பி
இடது கரத்தில் பிச்சைப் பாத்திரம்
வேடிக்கையாகவே அலைகிறேன் நானும்

இப்பொழுதும்
என் தோளில் தம்பி தூங்குகிறான்
இன்னும்
சில வினாடிகளில்
அவன் துயில் கலையலாம்
ஆனாலும்
என் பிச்சைப் பாத்திரம்
இன்னும்
வெறுமையாகவே இருக்கிறது
எனதும்
என் தம்பியினதும்
வெறும் வயிறு போலவே!

தனிப்பாடல் போன்ற அமைப்புப் பெற்ற இவரது புதுக் கவிதைகள் சிலவற்றில் கதையம்சத்துடன் கூடிய நீண்ட படைப் புகளும் இடம்பெற்றுள்ளன. ''ஒரு கிராமத்தின் பச்சை அடை யாளங்கள்'' என்ற கவிதை போர்ச் சூழலில் இராணுவத்தின் பிரசன்னத்தால் ஏற்படும் சமூக அவலத்தை சித்தரிக்கிறது. கிராமச் சூழலில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சிறுமிக்கு ஏற்பட்ட அவலத்தை தனிப்பாடல் அமைப்பில் கதையம்சத்துடன் சித்திரிக்

கும் பான்மை கீழ்க்கண்டவாறு அமைகிறது. இரத்தம் பீறிட்டுக் கொண்டிருக்கும் காயமாக தன் இருப்பைக் காட்டிக் கொண்டிருக் கிறது இக்கவிதை.

தூக்கத்திற்குள்
துவைந்த நிம்மதிச் சுவாசம்
முகாம் எங்கும் பரவி
சுற்றி வளைத்து எனை
முட்கம்பிகள் ஆக்கிரமித்தன

முரட்டுக்கரம் ஒன்று
எனைத் தட்டித் தூக்கிச் சென்றது
கரகரத்த நினைவுகள்
கடுமையாய் அவாவியது என்னை!
அவை நீண்டு கொண்டே வந்தன மௌனங்களாய்!
பந்துலுவும்
பண்டாரவும்
புஞ்சி நிலமையுமென்று
நாமங்கள் சில
காம வேகமாய் என்னைத் தீண்டின

சப்தங்களின் அவலம் கேட்டு
அதே பந்துலும்
அதே பண்டாரவும்

அதே புஞ்சி நிலமையும்
அம்புலன்சில் தூக்கிப் போயினர்

சுகம் பெற்று எழுந்திருந்த
பின்னொரு நாள்
அக்கம் பக்கமாக
பார்வைகள் துளாவியபோது
அதே பந்துலுவும்
அதே பண்டாரவும்
அதே புஞ்சி நிலமையும்
சுற்றிக் காத்திருந்தனர்
என் உறவுகள் போலவே!

இன்றைய சமூகத்தின் எரியும் பிரச்சினையாக இருப்பது இராணுவத்தினரின் நிலச் சுவீகரிப்பாகும். மக்களின் சொந்த நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக வேற்று நிலங்களில் அவர்கள் குடியிருக்க நிர்ப்பந்திக்கப்படுவதையும் அதனால் அவர்கள் படும் மன உளைச்சல்களையும் இன்னல்களையும் விபரிக்கிறது ''குந்தியிருக்க ஒரு குடில் நிலம்'' என்ற கவிதை.

அந்த அழகிய ஊரின்
எந்த வீதியிலும் பயணிக்க
மனிதர்கள் அஞ்சுகின்றனர்
ஆனாலும்
ஊரையும் வீதியினையும்
இப்பொழுதும் விரும்புகின்றனர்

நீ விரும்பியோ விரும்பாமலோ
அரைக்கோள வடிவையும்
கூம்பு வடிவையும்
கணித வுருக்களிலிருந்து பிடுங்கி எடுத்து
குடிலொன்று அமைத்துத் தருகின்றனர்
அதிலுன்னை இருத்துகின்றனர்
நீயுமிருந்தாய்

ஈழப்போரின் இறுதிக்காலத்தில் பிஞ்சுப்பாலகன் பாலச்சந்திரன் சுட்டுக்கொல்லப்பட்ட கொடுமை உலகின் மனச் சாட்சியையே உலுப்பியது. கவிஞரின் உள்ளமும் இந்த ஈனச்செயல் கண்டு கொதிப்படைகிறது. ''சத்தியங்கள் செத்த பூமி'' என்ற அவரது கவிதை கடூரமான துயரத்தை எவ்வளவு உக்கிரமான சொற்களில் வெளிப்படுத்துகிறது! உணர்வுகளின் கொடூரம் புதிய பாஷையை புதிய சொல்முறையைச் சிருஷ்டித்துள்ளது.

தீக்கங்குகளாய் சிதைந்து
தணல் மலையாய் நீண்டு விரிந்தன
விழுந்த இரத்த நிலங்களில்
உடல்கள்
செதிலங்களாய்ச் சிதறிக்கிடந்தன
அவர்களுள் சின்னஞ் சிறுவன்
பாலச் சந்திரனும் ஒருவன்

வஞ்சகம்
சூதுவாது
ஏதும் அறியாப் பாலகன்

அழகாய் மிரளும்
கண்கள் காணும்போது
உருகாதோர் உளமெல்லாம்
உருகி உறுமல் பெற்றிருக்க வேண்டும்

சமரபாகு சீனா உதயகுமாரின் கவிதைகளில் நீண்ட கவிதைகள் ஏனைய கவிதைகளிலும் பார்க்கத் தரத்தில் சிறந்து விளங்குகின்றன. அவற்றில் சமூக விமர்சனங்களையும் காண முடிகிறது. அனுபவித்து உணர்ந்து உருகும் ஒரு உலகை இவை எமக்குக் காட்டுகின்றன. ஒரு வேகத்தோடு எளிமையோடு அலங்கார வார்த்தை அநாவசியங்கள் ஏதுமற்று இக்கவிதைகள் சுவைஞனின் உள்ளத்தைப் பிணித்து நிற்கின்றன.

இவரது கவிதைகளில் நான் மேலும் சில சிறப்புக்களைக் காண்கிறேன். படிமங்களில் படாடோபப் பகட்டு இருப்பதில்லை. சிக்கனமான விரயம் செய்யாத வெளியீடு, அலங்காரப் பகட்டில்லாத எளிமை, சக்திவாய்ந்த சொற்பிரயோகங்கள்.

சமரபாகு சீனா உதயகுமார் நல்ல கவிஞராக மலர்ந்துள்ளார். இன்னும் பிரகாசிக்க இடமுண்டு என்று சொல்லும் கவிதை இயல்புகள் பலவற்றை இவரிடம் நான் காண்கிறேன். மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

editor@gnanam.info
0777 306 506

**3B, 46ஆவது ஒழுங்கை,**
**கொழும்பு - 06.**
**25.07-2013**

# உள்ளே...

1. வீரமறவர் திருநாள் .............................................. 17

2. எங்களால் மட்டுமே முடிகிறது .............................. 20

3. என் பேனாவின் நிதர்சனம் .......................................... 24

4. ஓர் இராணுவச் சிப்பாயின் ஏக்கம் ........................ 27

5. பச்சை உடை கழற்றி...! ................................................ 34

6. நாயும் முட்கம்பிக் கூடும் ......................................... 36

7. எங்கள் அன்புத்தம்பி ...................................................... 39

8. என் பிஞ்சுப் பிரபஞ்சத் தம்பியும் நானும் ........ 43

9. ஒரு முளங்கயிறு ............................................................ 49

10. ஒரு விதவைப் போராளியின் ஏக்கம் ............... 52

11. 'ஒரு பலத்தின் ' இருப்பின் மௌனம் பற்றி ... 57

12. என் கிராமத்தின் பச்சை அடையாளங்கள் ...... 60

13. ஒரு பெண் போராளி ................................................. 68

14. கசங்கிப் போன வெள்ளை ரோஜா ................... 72

15. மரணித்துப்போனது மனிதம்! ............................. 75

16. குந்தியிருக்க ஒரு குடில் நிலம் ............................ 79

17. நந்திக் கடல் வாவி மீன் குஞ்சுகள் .................... 85

18. நரபலி நாயகன் ............................................................ 90

19. சத்தியங்கள் செத்த பூமி இது ............................. 95

20. உழுத்த உடல்! காகம் ! சில நாய்கள்.............. 102

21. ஒரு வயோதிபனின் பெரு மூச்சு ..................... 104

## 1

# வீரமறவர் திருநாள்

பூமிக்கு மூலைகள் நான்கு
மூலைக்கு ஒன்றாக
கரும்புகளில் கால்கள் நட்டு
முற்றத்தில் பந்தலிட்டு
சாணி மெழுகி
மாவிலை தோரணங்கள் தொங்க விட்டு
கும்பம் நிறுத்தி வைத்து
வீரத்தமிழன் சாட்சியாய்
வெற்றிலை பாக்கு பழம் வைத்து
சாணிப்பிள்ளையாருக்கு
கிரீடம் வைப்பான் தமிழன்

ஆயுத எழுத்தை நினைவூட்டுவது போல்

மூன்று கற்கள் வைத்து

பாலும் நீரும் பானையிலிட்டு

பக்குவமாய் அடுப்பிலேற்றி

அக்கினி சாட்சியாக பாலும் பொங்கி வர

அரிசி பயறு பாலில் கலந்து

மும்முறை அள்ளி

பானையிலிடுவான் தலைவன்

அவன் வழி தலைவியும்...!

பொங்கல் முடித்து

படையலிட்டு

கற்பூர ஆராத்தி காட்டி

கண் குளிரப் பார்த்து

மற்றைய பலகாரங்களும் சேர

உறவுகள் சகிதம்

பகிர்ந்துண்டு மகிழ்வான்

மாலையானால்

போர்த்தேங்காய் அடித்தும்

கோழிச்சண்டை பார்த்தும்

தாச்சி கிளித்தட்டு மறித்தும்

எல்லே சடுகுடு என்று

வீரரின் வீரசாகசம்

குதூகலமாய்த் தொடரும்!

சித்திரை மாத முதல் நாள்

தமிழரின் வீரத்திருநாள்

அது வெற்றியின் பெருநாள்

தன்மானச் சிறுத்தை போல்

உலாவருவான் வீரத்திருமகன்

**- சூரியன் எவ்.எம். இல் வாசிக்கப்பட்டது**

## 2

# எங்களால் மட்டுமே முடிகிறது

செங்குருதி செம்புழுதி
எங்களுக்கு நிரந்தரம் காண்

வறுமை
கொடுமை
பசிமை
வெறுமை
எல்லாமும்
பழகிப் போயினவே!

பரபரப்பெல்லாம் அடங்கி
நீண்ட வெறுமை கலந்த அமைதி
மீண்டும் சூழ்ந்தது பார்

துயர்களும்

வலிகளும் வேதனைகளும்

தீராதபசிகளும்

வழமையாகிப் போயினவே!

தேர்தல் தேர்வுகாலங்கள் மட்டும்

சில சந்தோசங்கள் தரும்

எமை அரவணைத்து முத்தமிடும்

அவையும்

தற்காலிக சந்தோசங்களாகவே!

வென்றவர்கள்

வலுக்கட்டாயம் தருவர்

வலிகளை வலுவாக்குவர்

இரும்புப் பேயாகி

ஆக்கிரமித்து அழிப்பர்

அப்போது கூட

கொள்கை

தேசப்பற்று

உண்மை

இனவுணர்வு

இவை எல்லாம்

எம்மிலிருந்து பிரிவதில்லை காண்!

கையூட்டல்

ஊழல்

ஓரவஞ்சகம்

அழகாய் ஆக்கிரமித்த

பஞ்சப்புழுதி எரித்துக் கிளப்பும்!

அழுதல்

புலம்பல்

ஓலம்

தொடரும்

சுயதொழில் உதவி

வேலை வாய்ப்பு

லச்ச ரூபா காசோலை

வார்த்தை நீட்சிகளில்

எள்ளுடன் கலந்த

எலிப்புழுக்கையாவோம்
வார்த்தை யாலங்கள் நாறிப்புழுக்கும்!

வஞ்சக மனிதரின்
கரியமில வார்த்தை ஜாலங்களில்
கணங்கணமாய் உயிருடன் எரியவும்
வில்லங்கமாய் வலியுடன் வாழவும்
எங்களளால் மட்டுமே முடிகிறது
இங்கே!

**- ஞானம் / இது நம்தேசம்.**

3

# என் பேனாவின் நிதர்சனம்

என் பேனா
என்னையே முறைத்துப் பார்த்தது
கரகர மொரமொர என்று கிறுக்கியது

'அம்மா' என்று எழுதிய போது
அன்பு வாழும் இன் இதயமாய்
எனை அது நோக்கியது

'அப்பா' என்று எழுதிய போது
அறிவு தரும் ஒரு தேடலாய்
எனக்குள் அது இறங்கியது

தங்கை அடம்பிடித்து அழுதாள்
என் பேனா வேண்டும் என்றாள்

இன்னும் இன்னும்
அடமாய் அழுதாள் அவள்

தொடர்ந்த அவள் அருட்டுதல்கள்
என் நெஞ்சை அழுத்தவே
அன்பாக நீட்டினேன் அவளிடம்

அவளோ.!
எடுத்த எடுப்பிலேயே
'அண்ணெ என் தெய்வம்'
என்று உச்சரித்து எழுதினாள்

உச்சரிப்பாயும் உருப்படியாயும்
எழுதியிருந்தாள்
தங்கையின் உள்ளம் போலவே
அவள் எழுத்தும் எனக்குள்
இயல்பாய் நிரம்பி வழிந்தன
என் கண்களின் வீச்சுக்குள்
அண்ணெ தெய்வமாய் உருவானார்
என் மனதை இதமாய் நிறைத்தார்

இப்பொழுது
என் பேனாவும்
எனை இனித்துப் பார்த்தது
'அண்ணெ என் தெய்வம்' என்றால்
மறுத்துப் பேசவும் யாருமுண்டோ
அண்ணெ என்றால் அவர் அண்ணெதான்

என் பேனா
தங்கையின் கரங்களை இறுகப்பிடித்து
உறவாடி நின்றது

என் கரங்களோ
வெறுமை சுமந்து நின்றது
என்னைப் போலவே!

**- ஞானம் / இது நம் தேசம்**

4

# ஓர் இராணுவச் சிப்பாயின் ஏக்கம்

போராடும் வேளை வந்தது
அம்மா தந்த முத்தங்கள் மறந்து போயின
அப்பாவோடு தனித்திருந்த சுகங்களும்
வெறுத்து ஓடின

இந்தப் போராட்டம் எனக்கும் பிடிக்கவில்லை
இருந்தும்
என் வீட்டு அடுப்பங்கரைப் பூனைகளை
கலைத்தெறியும் ஒரு தருணம்
எனக்கும் ஒரு சந்தர்ப்பமாய் வந்தவேளை
இராணுவ சிப்பாய் பதவி பிடித்து
இங்கு வந்தேன் நானும்!

வண்டி இழுத்து
மூட்டை சுமந்து
முதுகு கூனி விட்ட அப்பா

நாலு மைல் தூரம் கால் வலிக்க நடந்து
நாற்று நட்டு வரம்புவழி நீர் பாய்ச்சி
நாலு காசு சம்பாதித்து வந்து
சோறு காய்ச்சித் தந்த அம்மா

வயதுக்கு வந்து
பத்து வருடங்களாகி வந்தன
கல்யாண வரனின் வரவு பார்த்து
நாளும் பெருமூச்செறியும்
ஆசைத் தங்கைகள் இருவர்

தோள்களில் துப்பாக்கி கனக்க
மனதும் இறுகி வலிக்க
காட்டிலும் மேட்டிலும்
மழையிலும் வெயிலிலும்
நாடு காக்கும் போர் வீரன்

எனும்
ஒரு போர்வை உடுத்தவனாய் நானும்

இன்றும்
அந்த அழிகிய வல்லை வெளியின்
வெயில் குளித்தபடி
எனக்கான இடத்தில் நான் மட்டும்
தனியனாய் நிற்கிறேன்
கையில் இருக்கும்
இரும்புக் குழல் துப்பாக்கியும்
ஊமல் வடிவக் குண்டுகள் சிலவும்
இரவானால்
வல்லை வெளி முனியப்பரும்
துணையாய் என்னுடன் இருப்பர்

நிறை வாகனங்கள் குறைவின்றிச் செல்லும்
கணவன் மனைவி
காதலன் காதலி
அப்பா மகன்
அண்ணன் தங்கை என்றெல்லாம்
உறவுகளின் ஊர்வலங்கள்

என் கண்களில் தைத்தபடி செல்வர்

ஏக்கங்கள் நிறைத்து
கன்னங்கள் வழி கண்ணீர் சிதைக்கும்
எனக்கும்

மீண்டும் மீண்டும்
கொஞ்சும் உறவுகளுக்காய்
அதையே ஊன்றி நினைக்கும்
என் அனாதை நினைவுகள்

எத்தனை காலங்களாய்
லீவு கேட்டு எழுதி
நீண்டு காத்திருக்க முடியும்
என்னாலும்

எனக்கு என்று அப்பா இல்லையோ...?
எனக்கு என்று அம்மா இல்லையோ...?
எனக்கு என்று சோதரரும் இல்லையோ...?

சுகங்களை எனக்குள் அள்ளிக் குளித்து
ஊக்கமுடன் ஆக்கித் தரும்
சிறு உணவுகளை அள்ளித் தீத்தி
உறவுகளின் பரிசங்களில் நனைந்திடவும்
ஒரு நாள் லீவு கூட எனக்கு இல்லையோ.?

அங்கே பாருங்கள்
அவர்கள் மட்டும் அழகாக வருகிறார்கள்
அவர்கள் மட்டும் உல்லாசமாக உறங்குகிறார்கள்
வாகனங்களில் வரிசை கட்டிப் பயணிக்கிறார்கள்

நான் மட்டும்
அதே துப்பாக்கியும்
அதே ஊமல் வடிவக் குண்டும் என்று
அதே நெருப்பு வெளியில்
கட்டி அணைத்துச் சுமந்து நிற்கிறேன்
உச்சி வெயில் பட்டு
என் மண்டை ஓடு
பாலம் பாலமாய் பிளவுபடும்

நன்றாக வேர்த்துக் கொட்டி
என் நெஞ்சோரம்
சிற்றருவி ஒன்று முளைத்தது போல்
உழன்று விடுகிறேன்

சுகங்கள் அனைத்தையும்
கட்டிக் காத்து அனுபவித்து
நாளும் சுகம் கொள்ளும்
அந்த அதிகாரியின் திடீர் வரவு
கண்களுக்கு காட்சி தரும்

கால்கள் நேராய் நிமிரும்
அவசரமாக அருகி வரும்
கீழ் நோக்கி நேராகி நின்று
உடலோடு ஓரம் விடும்
என் இடது கரம்...!
கன்ன ஓரம் தொட்டு
உள்ளங்கை காட்டி
உறுதியாய் மரியாதை தரும்
என் வலது கரம்...!

அதிகாரிக்கு
முகமெல்லாம்
பல்லாகச் சிரிப்பு!
எனக்கோ
உடல் எல்லாம்
வியர்வைத் துளிகளின் சிலிர்ப்பு!

இன்னும்
ஏங்கிப் பெருமூச்செறிந்து
வெயிலில் தோய்ந்து குளிக்கிறது
இழகிய என் நெஞ்சு
அழகிய என் உறவுகளுக்காய்...!

25.09.2008

**- இது நம் தேசம்**

5

# பச்சை உடை கழற்றி..!

நீண்டு வீழும் குண்டுகள்
உயர்ந்து விட்ட தீச்சுவாலைகள்
இவை கண்டு துவண்டு போகும் நெஞ்சு

வளமான வயலும் பசும்பனைத் தோப்பும்
பச்சை உடை கழற்றி
கரும்புகைச் சட்டை அணிந்தன

பல ஆயிரம் விதவைகள் விதைப்பு
பல தமிழ் உயிர்கள் புதைப்பு
கோயில்களும் சேர்ச்சுகளும்
இடித்துடைப்பு

ஈங்கு விளை நிலங்கள்
கொலைக்களங்களாக
ஆங்கு தலைநகர்

கலைநகராகுமோ...?
விதவைகள் படைத்த
படைப் பிசாசுகளுக்கு
மகளிர் கரங்கள் பூமழை சொரியும்

இறைதலம் இடித்த
மடைக் காடையர்க்கு
மதகுருவின் கரங்கள் மணிமகுடம் அணியும்

அலைவும் உலைவும்
அழிவும் சிதைவும்
ஒரு பக்கம் மட்டும்தான்
அதுவும் எங்கள் பக்கம்தான்

இவை
யாருக்கு என்ன?
எவருக்கு என்ன?
எனும் நிலைகளிலேயே
இன்றும் நாங்கள்?

20.10.2008

**- கலைமுகம் / இருக்கிறம்**

## 6

# நாயும் முட்கம்பிக்கூடும்

அந்த இனிய ஞாபகங்கள்
எனக்குள்ளிருந்து குமைகின்றன

நான் தந்த
மிச்ச சொச்ச உணவுகளையும்
உண்டு களித்து வாலைக்குளைத்து
நன்றி சொல்வாய் நீ

எனக்கு என்ன.? எனக்கு.?
அழகான மனைவி
அன்பான பிள்ளைகள் என்று
சொல்லிச் சொல்லி
மிடுக்குடன்
உலா வந்திருக்கிறேன் நான்

உனக்கு இரவிலும்
சில வேளை பகலிலும்
உலாத்தித் திரிய சிறு சுதந்திரம்
அது கூட வீட்டு வளவு
இல்லையேல்
உனக்கு என்ற கம்பிக்கூடு

மனிதனை மனிதன் கொன்று குவித்து
குருதி குடித்து
துவம்சம் செய்யும் தருணங்கள் பார்த்து
ஓடிக்கொண்டோம் நாம்
எம் பின்னே ஓடிவந்தாய் நீயும்...!

இந்த ஓட்டத்தின் அந்தம்
என்னமோ
முட்கம்பிக் கூடுதான்

நானும் நாங்களும் பாவம்
மனிதர்களால்தான்

எனக்கும் எங்களுக்கும்
இரத்த உறை அவலங்கள்

உன் இனமும் நீயும்
இன்னமும்
ஆடை அணிந்ததில்லைத்தான்
இன்று நாமும்தான்.?

உண்டியும் உறையுளும்
உனக்கும் உங்களுக்கும் தாராளமாய்
இவை யாவும்
எனக்கும் எங்களுக்கும் மறுக்கப்பட்டதாய்

29.06.2009

- இருக்கிறம்

7

# எங்கள் அன்புத்தம்பி

எங்கள் உயிரிலும் மேலானவன்
எங்கள் அன்புத்தம்பி
தமிழ் உறவுகளிலும்
தமிழ் உணர்வுகளிலும்
உயிரானவன் அவன்

தம்பி இருந்தால்
எனக்கு மட்டும் என்ன..?
என் வீட்டில் உள்ளோருக்கும் என்ன.?
என் ஊருக்கும் மட்டும் என்ன.?
என் அயலவர்க்கும் பெரும் பலம் அவன்.!

தம்பி உள்ளவன் சண்டைக்கு அஞ்சான்
என்பது உண்மைதான் போலும்
எங்கள் அன்புத்தம்பி
எங்களோடு இருக்கும் காலங்களில்

இல்லை இல்லை

அது தப்பு

நான்

நாங்கள்

என் ஊர்

என் அயலவர் என்று

எல்லோரும்

தம்பியோடு இருக்கும் காலங்களில்

எங்களுக்கென்று

எந்தக் குறையும்

எந்தப் பயமும்

எப்பொழுதும் இருந்ததில்லை

தம்பி நேர்மையான சண்டியன்

ஒழுக்கத்திலும் மேலானவன்

தம்பி ஒரு ரோசக்காரன்

தம்பி ஒரு பொல்லாதவன்

என்றெல்லாம்

எங்கள் எல்லாருக்கும் தெரியும்

ஆனாலும்

தம்பியை

எல்லோருக்கும் பிடித்திருந்தது

ஏனென்றால்

எப்பொழுதும் பொய் பேசியதில்லை

எங்கள் அன்புத்தம்பி

எல்லோருக்கும் பிடித்திருந்த
எல்லோர் மனங்களிலும் வாழ்ந்திருந்த
தமிழ் உயிராயும்
தமிழ் உணர்வாயும்
வீரியம் பெற்றிருந்தான்
எங்கள் அன்புத் தம்பி

அன்றொருநாள்
கூட்டத்தோடு கூட்டமாக
சனங்களோடு சனங்களாக
காணாமல் போயிருந்தான்

உள்ளங்களால் பதறித்தான் போனோம்
நாங்களும்!
உதிரங்களால் உறைந்துதான் போனார்கள்
அயலவர்களும்!

எங்கள் அன்புத்தம்பி
காணாமல் போன நாளிலிருந்து
எழுந்து நடக்க இயலாத துரும்பனும்
இருந்து கொண்டே
எங்களை உதைக்கிறான்
எங்களை மிதிக்கிறான்

இனி எப்ப வருவான்
எங்கள் அன்புத்தம்பி

**26.11.2009**

**- ஞானம்**

## 8

# என் பிஞ்சுப் பிரபஞ்சத் தம்பியும் நானும்

என் சின்னக்கரங்களுக்கு
எத்தனை ஆசைகள் இருந்தன
என்பது
உங்களுக்குத் தெரியுமா..?

புத்தகம் தூக்கி வரவும்
அழகிய தமிழை
அழகாய் உச்சரித்து
குண்டு குண்டு வடிவாய்
அம்மா! அப்பா.! எழுதவும்
என் சின்னக்கரங்களுக்கு
மீண்டும் ஆசை பிறக்கின்றன

அடுக்களையில் குந்தி இருப்பார்

அம்மா.!

அருகாய் நான் இருப்பேன்

அருகாய் இருந்து

ஊதி.! ஊதி.!

அடுப்புப் பத்த வைப்பேன்

தேங்காய் துருவியும்

வெங்காயம் உரித்தும்

மிளகாய் நறுக்கியும்

காய்கறி வெட்டியும்

நித்தம் அம்மாவுக்கு உதவி செய்யும்

என் சின்னக்கரங்கள்

தம்பி அழுதால்

தோளில் போட்டு ஓராட்டும்

என் சின்னக்கரங்கள்

தூளியில் துயிலும்
தம்பியின் கனவுச் சிரிப்புப் பார்த்து
மெதுவாய் கிள்ளவும் செய்யும்

சின்னச் சின்ன உதவிகளுக்கான
சின்னக்கரங்கள் இரண்டும்
அம்மி அரைக்கும்
அம்மாவின் தோளில் தொத்தி
சின்ன ஊஞ்சலாடி மகிழும்

காலையில் வேலைக்குப் போய்
மாலையில் வரும்
அப்பாவின் வரவு கண்டால் போதும்
துள்ளிக் குதித்து ஓடி
சைக்கிள் பெடல் கட்டையில்
தொங்கி நிற்பேன் நான்

என்னையும் சேர்த்து
அழகாய் உருட்டி வருவார் அப்பா

அள்ளி எடுத்து முழுதாகக் கொஞ்சி
முறுக்குப் பொட்டலம் ஒன்று தந்து
தம்பியையும் அள்ளி முத்தம் தருவார்

இவை எல்லாமே
இன்று சனங்களொடு சனங்களாய்
காணாமல் போயிருந்தன

வேதனை நிறைத்த
நெளி கோடுகளின் துயரங்கள்
வழி நெடுக வந்த மரண வலிகள்
எல்லாவற்றையும்
இதயச் சுவர்களில்
எத்தனை காலங்கள் வரை
சுமக்க முடியும் என்னாலும்

முகம் சிதறுண்ட அம்மாவும்
குடல் வெளி வந்து
தண்ணி தண்ணி என்று

அனுங்கி மடிந்த அப்பாவும்
இன்னமும் என் கண்களில்தான்

என் வகுப்புப் பிள்ளைகள்
அழகாக பள்ளி போகின்றனர்
பிள்ளைகளோடு பிள்ளைகளாக
கைவீசி நடந்து பள்ளி செல்லவும்
கலகலப்பாகப் பாடங்கள் படிக்கவும்
ஆவல் பிறக்கிறது எனக்கும்

ஆனாலும்
வலது கரத்தில் பிஞ்சுப் பிரபஞ்சத் தம்பி
இடது கரத்தில் பிச்சைப் பாத்திரம்
வேடிக்கையாகவே அலைகிறேன் நானும்

இப்பொழுதும்
என் தோள்களில் தம்பி தூங்குகிறான்
இன்னும்
சில வினாடிகளில்

அவன் துயில் கலையலாம்

ஆனாலும்

என் பிச்சைப் பாத்திரம்

இன்னும்

வெறுமையாகவே இருக்கின்றது

எனதும்

எனது தம்பியினதும்

வெறும் வயிறு போலவே...!

**07.03.2010**

**ஞானம்**

# 9

# ஒரு முளங்கயிறு

ஆக்கிரமிப்புக்கள் எப்பொழுதும்
ஒரு பக்கம் சார்ந்தவையே
ஏனெனில்
ஆக்கிரமிப்புக்களின் முழுப்பாகமும்
ஆண்களில்தான்
வடிவமைக்கப்பட்டிருக்கின்றன

அதனால்தானோ என்னமோ
யுத்த ஆயுதங்கள் அனைத்தும்
ஆண்களின் உடற்பாகங்கள் போல்

ஓர் இனக்குழுமம்
இன்னோர் இனக்குழுமத்தின்
ஆண்குழுமத்தை
உயிர் பலியிடும்! ஊனமாக்கும்!

மற்றும்
சிறையிலிடும்!
அச்சுறுத்தி மௌனியாக்கும்.!

பிறகு பிறகு
இயங்கியல் நிலை பெண்கள் மீது
முழுக்கவனம் குவிக்கும்
அப்பொழுதெல்லாம்
படைகளின் பாலியல் இச்சைகளும் நீளும்

பார்த்தால் பயங்கரம் தரும்
பச்சை உடைகளும்
இரும்புக்குழல் துப்பாக்கிகளும்
மீண்டும் மீண்டும்
அச்சுறுத்தி மௌனியாக்கும்

அச்சுறுத்தலை அச்சுறுத்த
அவசரம் தேவையாக உள்ளவை
ஒரு பிடி சோறும்
ஒரு முளம் கயிறுமே!

ஒரு சாண் வயிறு நிரப்ப
ஒரு பிடி சோறு
இல்லையேல்
துவம்சிகளின் தொண்டை நெருக்க
ஒரு முளம் கயிறு

**11.04.2010**

**- மல்லிகை**

## 10

# ஒரு விதவைப் போராளியின் ஏக்கம்!

என்னைப்பற்றி எந்தவொரு கதையும்
எவரும் கட்டி விடலாம்
ஏகமனதாக ஏற்க
ஒரு சில நிமிடங்கள் போதும்
இந்த ஊருக்கு!

என் இதயம்
அடிக்கடி பிடுங்கப்பட்டிருக்கிறது
அடிக்கடி சிதைக்கப்பட்டிருக்கிறது

சாவு கூட
என்னிடம்
பலதடவை தோற்றிருக்கிறது
அப்பொழுதெல்லாம்
எனக்குள்

இயல்பாய் நிரம்பி இருந்தவை
என் துணிவும்
என் பணிவும்தான்

தலைக்கு முள்கிரீடம் அணிவித்தும்
நெஞ்சில் சிலுவையை சுமப்பித்தும்
தலையில்
மலை ஒன்றைத் தூக்கி வைத்தும்
என் மொத்த உடலையும்
கழுவில் ஏற்றி
கைகொட்டிக் களித்ததெல்லாம்
என் சமூகம்தான்!

உதடுகளுக்கான
புன்னகைகளைப் பிடுங்கி எடுத்ததும்
சப்பித் துப்பி ஏப்பம் விட்டதும்
என் சமூகம்தான்!

என் கண்களுக்கான
நேசவிரிவினைத் தடுத்து நிறுத்தி
மோப்பம் செய்து முகாரிபாடி
சிரித்ததெல்லாம் இதே சமூகம்தான்!

வர்ணக் கலப்பில்லாத
அழுக்கு ஆடைகளை அணிவித்தும்
பாதம் வரை கறுப்பாய் நீண்ட
கூந்தலுக்கான பூக்களைப் பறித்தும்
நெற்றிக்கான குங்குமத்தை அழித்தும்
வீட்டுக்குள் முடங்கி இரு என்று
சட்டம் போட்டதெல்லாம்
என் சமூகம்தான்!

துன்பம் வரும் நேரம் சிரி என்றால்
சில நேரம் சிரித்திருக்கலாம்
ஆனாலும்
எத்தனை பேருக்கென்று
என்னாலும் சிரிக்க முடியும்?

கட்டாய தேவைகளுக்காக
வெறுமைகள் பிடித்து
பொறுமைகள் காத்து
பூமியை வெல்லும் தருணங்கள்
எனக்குள்ளும்...!

எல்லைகளில் இருந்தபடியே
எதிரியின் எறிகணைகளை
தடுத்து நிறுத்தி

பல நாள் நித்திரைகள் இழந்திருக்க
கைகளில் முளைத்திருந்தது துப்பாக்கி!

சமர் செய்து
சுட்டுப் பொசுக்கி
விண்ணளவாக
உயர்ந்த கணங்கள்

எல்லாமே

சாதனைகளாய் நீள...

இப்பொழுதும்

எனக்குள் முளைத்த

திமிர் மௌனங்களை நினைத்து

மௌனமாகவே

இருந்துவிடுகிறேன் நானும்

12.05.2012

- ஞானம்

11

# 'ஒரு பலத்தின்' இருப்பின் மௌனம் பற்றிப் பேசுதல்

ஓரினத்தின் பெரும் சிதைவுகளும்
ஓரினத்தின் உருக்குலைவுகளும்
ஓரினத்தின் ஓரவஞ்சகத் தரப்படுத்தல்களும்
எத்தனை காலங்களுக்குத்தான்
நீண்டு செல்ல முடியும்?

இழப்புகள் எப்பொழுதும்
எங்களுக்கு மட்டுமே சர்வசாதாரணங்களாய்
அது இப்பொழுதும்தான்

இன அறுவடையில்
சிக்கித் திக்கு முக்காடி
சீர்குலைந்து
எஞ்சிய நெல்போல்
இயந்திரச் சப்பல்களுக்குள் அகப்பட்டு
நிர்வாணமாக்கப்பட்டிருக்கிறோம்

நில அறுவடையும் முக்கியமாகி
மூச்சுக்காட்ட முடியாமல்
முழுசும் முழுமனிதராகவே
இன்றும் நாங்கள்

இருந்த இடம்
அடைக்கலம் புகுந்த இடம்
என்று
எங்கிருந்தும் விரட்டப்பட்டோம்

எப்பொழுதுமே அசைக்க முடியாமல்
எப்பொழுதுமே அழிக்க முடியாமல்
இத்தனை காலங்களாய்
எங்களிடமே இருந்துவிட்ட
அந்த 'ஒரு பலத்தின்'
இருப்பின் மௌனம் பற்றி
தேடத்தொடங்கியிருக்கிறோம்
இப்பொழுது

தரையில் சிதைபட்டதையும்
கடலில் கலைபட்டதையும்
ஆகாயவழி விழுந்த ஒப்பாரிகளையும்
நேருக்கு நேராய் நெஞ்சு நிமிர்த்தி
அள்ளித் தூர எறிந்ததெல்லாம்
அந்த ஒரு பலம் தான்!

இன அறுவடையும்
நில அறுவடையும்
இனியும் தொடருமாப்போலவே
நீண்டு வந்து அச்சுறுத்துகின்றன
பேரினப் பேய்களின்
கரும் நாக்குகள்

ஆதலால்
ஒரு பலத்தின்
இருப்பின் மௌனம் பற்றி
தேடத்தொடங்கியிருக்கிறோம்
இப்பொழுது!

**26.11.2010**

**- ஞானம்**

## 12

# என் கிராமத்தின் பச்சை அடையாளங்கள்

இனி என்னிடம் எதுவும் இல்லை
எதுவுமில்லாத
ஒரு தனியனாக அழுது அலைகிறேன்

வீடும்
வீட்டுச்சூழலும்
உறவுகள் பலரும்
என்னிலிருந்து பிரியும் வேளை
கேவி கேவி
அழுதுதிருந்தேன் நானும்

பூவரசுக் கொம்புகளிலிருந்து
படக்படகென்று
வீரியமாய் சிறகடித்து கூவி அழைத்த
சேவல்களும்

பனைமரக் கூடலுக்குள்
கரைந்து பறந்து
குமிழம் முள்க் குச்சிகளாலும்
சின்னச் சின்னக் கம்பிகளாலும்
வளைந்தும் நெளிந்தும்
உருவான காகக்கூடும்

காகக்கூட்டின் நடுவாய்
தேங்காய்த் தும்புகளும்
தேடி எடுத்த கடதாசித் துண்டுகளும்
பதமாய் மெத்தை வைத்து முட்டையிடும்

விடிய வெள்ளெனவாகவே
கரைந்து கரைந்து
சுறுசுறுப்பாய்
ஆர்ப்பரிக்கும் காகங்களிலும்
பல் பாடங்கள் கற்றோம்
நாளும் நாம்

கூடவே
குருவிகளின் குதூகலமும்
தேனிக்களின் ரீங்காரமும்
நெஞ்சை நிரப்பி ஆனந்தம் செய்யும்

பூவரசு கிழுவை மரங்களை
கட்டித் தழுவி வேலிகளாய் நீளும்
பனை ஓலைகளும்
வானமளவாய் வளர்ந்து சோலைகள் தந்த
வாகை வேம்பு ஆலமரங்களும்
இனிய கனிகள் தந்த
மா வாழை பலாமரங்களும்
என் கிரமத்தின் பச்சை ஆடையாளங்கள்

அம்மா அப்பாவிற்கு
நான் ஒரு செல்லப்பிள்ளை
நான் ஒரு சின்னப்பிள்ளை

காலையிலும்
மாலையிலும்
தோழிகளோடு சேர்ந்து

கல்லுக்குத்தியென்றும்
கள்ளன் பொலிசென்றும்
ஓடி ஒளித்து விளையாடியதும்
கால் பாதம் வரைந்த கோடுகளுக்குள்
கிந்தித் தொட்டது எல்லாமே
இனிப்பு ஞாபகங்களே

கந்தகக் குண்டுகளின்
கனத்த விழுகை பார்த்து
குருதிகள் சிதறச் சிதற
ஒளித்து ஓடியவர்களில்
நானும் ஒருத்தி!

ஊரே சோகமயமாய்
அழுத நிலை பார்த்து
நெஞ்சு உலுப்பி
இடியாய் அழுதது இதயம்

அருவியாய் ஓடிய குருதியில்
பெரும் துளியாய் கண்ணீர் மல்கி

அழுது உருப்படி குலைந்தேன் நான்
தலை சிதைந்த
உடலுருக்களிடையே
கை
கால்
கண்
சிரசு
இழந்தோர் நடுவிடையே
தனியனாக இன்னும் நான்

காணாமல் போன அப்பாவும்
காற்றாய் மறைந்த அம்மாவும்
என் கண்களில்
நிழலாய் ஓடி நிஜங்களாகினர்

தூக்கத்திற்குள்
துவைந்த நிம்மதிச் சுவாசம்
முகாம் எங்கும் பரவி
சுற்றி வளைத்த எனை
முட்கம்பிகள் ஆக்கிரமித்தன

முரட்டுக் கரம் ஒன்று
எனைத் தட்டி தூக்கிச் சென்றது
கரகரத்த நினைவுகள்
கடுமையாய் அவாவியது என்னை...!
அவை நீண்டுகொண்டே வந்தன
மௌனமாய்...!

பந்துலுவும்
பண்டாரவும்
புஞ்சி நிலமையுமென்று
நாமங்கள் சில
காம வேகமாய் எனைத் தீண்டின

மனித நாய்களின்
முரட்டு முனகல்கள் எனையமூத்த
சிறுமி என் மேனி
ஆவி சோர

முரட்டு மூடர்கள் முரடாய் அமுக்கினர்
மூச்சுத் திணறி முயன்று தோற்று
முடங்கித் துடித்தேன்

சிறு யோனி சிதைந்து கிழிந்தபோது...!
வலிகள் நிறைந்த மௌனங்களுக்குள்
அள்ளப்பட்டு ஆளப்பட்டு
செத்து செத்து
ஏங்கிய நாள் ஒன்றில்
வலி தாங்கா மனது
முறிந்து கிடந்த
சவர பிளேற் துண்டுடொன்றை
வாயில் போட்டு
காய்ச்சல் குளிகை முழுங்குவது போல்
முழுங்கி விட்டேன்
அத்தனை வலிகளோடும்

சப்தங்களின் அவலம் கேட்டு
அதே பந்துலுவும்
அதே பண்டாரவும்
அதே புஞ்சி நிலமையும்
அம்புலன்சில் தூக்கி போயினர்

சுகம் பெற்று எழுந்திருந்த
பின்னொரு நர்ள்
அக்கம் பக்கமாக
பார்வைகள் துளாவிய போது

அதே பந்துலுவும்
அதே பண்டாரவும்
அதே புஞ்சி நிலமையும்
சுற்றிக் காத்திருந்தனர்
என் உறவுகள் போலவே

மீண்டும் வலிகளைச் சுமந்து
அழுதது என் நெஞ்சு
எனக்கொரு அப்பா வேணும்
என்றும்
எனக்கொரு அம்மா வேணும்
என்றும்

**25.12.2010**

**-ஞானம்**

13

# ஒரு பெண் போராளி

விழிகளைப் பிடுங்கி எடுத்து
மார்புகளைக் குத்துச் சப்பி
உடல் துடிக்க துடிக்க
உயிர் பதைக்கப் பதைக்க
கொதிக்கும் தாருக்குள் எறிந்து
எரியும் தீயுக்குள் விழுத்தி
சங்காரம் செய்த
அசுர மனிதர்களை நோக்கி
பாய்ந்திருந்தன
என் துப்பாக்கி முனைக் குண்டுகள்

என் இனத்தின் விடுதலை சுவாசத்திற்காய்
முழு மூச்சாய் போராடி
கரித்துவிட்ட என்முகம் காண
எவருக்கும் விருப்பமில்லை இன்று
என் இனம்

என் நாடு
என் மக்கள் என்றுதான்
என் எண்ணங்கள் விரிந்திருந்தன
ஓடியோடி
அவர்களுக்காகவே
உலைந்தும் இருக்கின்றன

போரியல் உருவம் காணவும்
ஆலோசனைகள் கேட்கவும்

எத்தனை மனித வரவுகள்
என் பின்னே வந்திருந்தனர்

இயந்திரத் துப்பாக்கியும்
வெடி மருந்துக் குண்டுகளும்
நெஞ்சு தொங்கிய நஞ்சுக் குப்பியும்தான்
என் உறவாய் இருந்துள்ளனர்

தமிழிச்சியின் யோனி கிழித்த
பற்களைக் கிழித்தெடுத்திருக்கிறேன்
தமிழ்ச்சோதரியின் மார்பு சப்பிய
ஓநாய்களைக் கசக்கிப் பிழிந்தெடுத்திருக்கிறேன்

வீரநடையின் வீச்சும்
வீரத்தமிழ் மொழியின் பேச்சும்
துப்பாக்கியின் இயங்குகையும்
கைக்குண்டுகளின் வீசுகையும்

என்னையும்
என் சக தோழிகளையும்
என் சமூகத்தையும் முன்னேற்றியிருந்தன
அசிங்க மனிதர்களை
ஓட ஓட விரட்டித் துரத்தியிருந்தன

எரிசுவாலைபட்டு
கண்கள் கூச விழுந்திருந்து
கால்கள் இழக்க வீசப்பட்டு
நடைபிணமான
மெளனித்த மனத்துடனேயே
இன்று நானும்
அது கூட முச்சில் வண்டியின்
இருக்கையில் இருந்தபடி

செம்புழுதி இறக்கை கட்டிப் பறக்கிறது
செங்குருதி இறைத்தபடி ஓடுகிறது
தமிழ்ச் சோதரியின் யோனி கிழித்தும்
தமிழ்ச் சோதரியின் மார்பு சப்பியும்
உருக்குலைத்து துவம்சம் செய்வது
அவனும் ஒரு துரோகி என்பதை
காதுகள் கேட்கின்றன

கண்களை இழந்த எனக்கு
கால்களை இழந்த எனக்கு
காதுகளும்
செவிடாகிப் போயிருக்கலாமோ
என்று மட்டும் நினைக்கவே
இன்று என்னால் முடிகிறது

02.01.2011

- இது நம் தேசம்

## 14

# கசங்கிப்போன வெள்ளை ரோஜா

அவன் மிகவும் பாவம்
இளவல் வயது அவனுக்கு
புதிதாகப் புத்த வெள்ளை ரோஜா போல்
உள்ளம் வெண்மையாக இருந்தது

நெஞ்சுவழி விலாவென்புகளும்
தேய்ந்து போன உடலும்
ஊசலாடும் உயிரும்
இன்னும்
அவன் சொந்தமாயிருந்தன

எல்லாம் இழந்து
எதுவுமில்லாத தனியனாக
நடுவெயில் தகித்த
புழு போலத் துடித்துக் கிடந்தான்

மேலே.! கீழே.!
என்று
மூச்சு வித்துத் தின்று
களைத்துப் போய்க்கிடந்தான்

ஈக்களும் எறும்புகளும்
அவன் சொந்தமென்று உறவாகின
அவை
புண்கள் மொய்த்து ஊர்ந்து ருசித்து
உபத்திரவம் செய்தன
ஒவ்வொரு தருணவும்
கைவீசிக் கைவீசி கலைத்தான்

பிச்சைக்காக ஏந்திய
பிய்ந்த பாத்திரம் மட்டும்
இன்னும்
வெறுமையாகவே இருந்தது
மனித புருசர்கள் சிலரின்
ஒன்றும் இல்லாத மனங்கள் போல

**16.02.2011**

**- சூரியன் எப். எம்.**

15

# மரணித்துப்போனது மனிதம்!

மண்ணைக் குடைந்தும்
விண்ணை அளாவியும்
மனித தேடுதல் தாகம் நீண்டிருக்கிறது
மண்ணின் ஆழம் அளந்தவன்
விண்ணின் வீச்சம் தொட்டவன்

சுருங்கிய உள்ளத்தை
சுருக்கிச் சுருக்கிட்டு
சுக்கு நூறாய் சிதைத்திருக்கிறான்
நாங்களும்
மனிதர்கள் என்பதை மறந்திருக்கிறான்
எங்கள் உள்ளத்தை
ஊடுருவி பார்த்திருக்க வேண்டும்

எங்கள் மனக்கிலேசங்களை

உருப்படியாய்

ஆய்வு செய்திருக்க வேண்டும்

அம்மா அப்பாவை

இழந்த வலிகளும்

சோதரரின் குருதி உறைந்த முகங்களும்

இன்னும்

நினைவுகளாய்த் தெரிகின்றன

நரம்புகளும் மடிப்புகளாக வெடிக்கின்றன

ரத்தச் சிதறல்களின்

வெடுக்கு மணங்களைச் சுவைத்தும்

மரணித்த உடல்களோடு படுத்தும்

மரணங்களால்

சப்பித் துப்பப்பட்டிருக்கிறோம்

வானைப் பிளந்து

நெடுக்கு ஓலங்களாய்

கிழித்தெறியப்பட்டிருக்கிறோம்

எங்களுக்குத்தான் தெரியும்
மரணத்தின் ருசியும்
அந்த மரணங்கள் தந்த வலியும்

ஓங்கி வளர்ந்த கவலைகள்
மனதுக்குள் முடங்கியிருக்கின்றன
மழை நீர் குடித்து வீங்கிய தவளைகள் போல்
மரண பயங்கள் துரத்தியிருக்கின்றன

வெயிலின் தகிப்பும்
மழையின் அழுகையும்
மாறி மாறி கலைத்திருக்கின்றன
பசியின் தாகமும்
மரணருசியின் வேகமும்
நீண்டு கொண்டு
கலைத்திருக்கின்றன

கொப்பிழந்த மரங்களும்

கூரை மறந்த சுவர்களும்

கூடாரமாய் குளிர்மை தருகின்றன

கவலைகளோடு

எங்களை அரவணைக்கின்றன

25.09.2011

**- சூரியன் எப்.எம்.**

16

# குந்தியிருக்க ஒரு குடில் நிலம்

வீதியின் இரு மருங்கிலும்
விசாலமாய்
பரவி வளர்ந்த தென்னையோலைகள்
ஒன்றோடு ஒன்று
உரசி உரசி
உஸ்.. உஸ்
சப்தங்களை வருவித்தன

நீண்ட நெடு நாளைய ஆசைகளை
நெஞ்சிலிருந்து அள்ளி வீசியது போல்
நெடுமூச்சை எறிந்து கொண்டன

தோட்டக்காரனையும்
பிள்ளைகளையும்

இன்னும்
அங்கு காணவில்லை

ஒரு நாளா?
இரு நாளா..?
இத்தனை நாட்களாகியும்
அவர்கள்
இன்னும் வரவில்லை

அள்ள அள்ளக் குறையாத
செல்வ நெற்கதிர்கள் எல்லாம்
எரிந்து சரிந்திருந்தன
சின்னச் சின்ன வீடுகளெல்லாம்
சாம்பல் மேடுகளாய்
உருமாறியிருந்தன

ஊணுக்காய் உலாத்தித் திரிந்து
புற்தரைகளில் படுத்துறங்கி
குட்டைகளில் நீர் குடித்து
களைத்துறங்கும்

பசுக்களையும்
காளைகளையும்
இன்னும் காணவில்லை

குப்பைகளைக் கிளறி
கொக்கரிக்கும் கோழிகளையும்
பூவரசுக் கொம்புகளிலிருந்து
கூவும் சேவல்களையும்
கிளை பரப்பிய மரங்களில்
படுத்துறங்கிக் கீச்சிடும்
மைனா குருவி இனங்களையும்
இன்னும் காணவில்லை

அந்த வீதியால்
நடந்து செல்ல வேண்டுமென்ற
நீண்ட நாள் ஆசைகள்
நிறைவேறுமளவுக்கு
மௌன மனவெளி
வெறுமையாகவே இருண்டு கிடக்கிறது

அந்த அழகிய ஊரின்
எந்த வீதியிலும் பயணிக்க
மனிதர்கள் அஞ்சுகிறனர்
ஆனாலும்
ஊரையும் வீதியினையும்
இப்பொழுதும் விரும்புகின்றனர்
குந்தியிருக்க

ஒரு குடில் நிலமிருந்தால்
போதுமென்று
ஆசைப்படுகிறனர்
இருந்த போதும்
உனக்கு மட்டும்
புதிதாக நிலங்கள் தருகின்றனர்

நீ விரும்பியோ விரும்பாமலோ
அரைக்கோள வடிவையும்
கூம்பு வடிவையும்
கணிதவுருக்களிலிருந்து பிடுங்கி
குடிலொன்று அமைத்துத் தருகின்றனர்

அதிலுன்னை இருத்துகின்றனர்
நீயுமிருந்தாய்

நல்ல காற்றை
நீ சுவாசிக்க
குடிலருகாக மரங்களை நடுகின்றனர்
இதில் எவற்றையும்
விரும்பமாட்டாயென்பது
எங்களுக்கும் தெரிகிறது
ஆனாலும்
நீ ஒருவன்
தனியே இருக்கவும்
நீ ஒருவன்
தனியே உறங்கவும்
நிலங்களையும்
வீடுகளையும்
உனக்கு மட்டுமே தருகின்றனர்

அழுதழுது

கண்கள் வெடிக்கின்றன

கண்ணிரும் கண்ணீர் விட்டழுதன

தங்கி நின்று சிந்தி விழுவதற்கு

கண்கள் இல்லையே என்று..?

**12.01.2012**

**- இது நம் தேசம்**

## 17

# நந்திக்கடல் வாவி மீன்குஞ்சுகள்

நெஞ்சு நெஞ்சாய் அடித்து
மண்ணில் புரண்டு
கத்திக் குழறி அழுதார்
என் அம்மா

பிஞ்சுள்ளங்களும் செய்வதறியாது
நெஞ்சு துவட்டி விம்மியழுதனர்

இரத்தமோடி மண்குழிந்த இடமும்
இரத்தவுறவுகளின் உயிர்பிரிந்த இடமும்
இதுதான்

கட்டுமரம் ஏறி
கண்கள் வலிக்க வலிக்க

நித்திரை முழிப்புகள் பிடித்து

வாடியிருந்த கொக்குகள் போல்

ஏங்கியிருந்தோம்

வலையில் சிக்கி வரும் மீன்களை

தலையில் சுமந்து காததூரம் நடந்தால்

விலையிலும் குறைவிருக்கும்

இருந்தும்

விற்று

சிறு காசு பெற்றுவிட்டால்

இரு சிறங்கை அரிசி

முற்றத்து முருங்கை இலைகள்

சேர்த்து

கஞ்சி காய்ச்சித் தருவார் அம்மா

அம்மாவைச் சுற்றியிருந்து

நானும்

இளவல்கள் நால்வருமாக

கஞ்சி குடித்து ஏப்பம் விடுவோம்

சிறு நிம்மதி பிடித்து உறங்கிடுவோம்

அம்மாவைப்போல்
எத்தனை அம்மாக்கள்
இன்று கத்திக் குழறினர் தெரியுமா?

நெஞ்சு முட்டிய வலிகள்
இன்னும்
நீண்டு கொண்டே
கனமாய்த் தெரிந்தன

ஐயோ! ஐயோ!
என்று அலறும் அவலோலங்கள்
வஞ்சகர்களின்
வயிறினைக் கிழித்துக் கீலங்கள் போடா
தோ...?

பொறுத்திடுமா நெஞ்சு..!
பிஞ்சுகள் கெஞ்சும் குரல் கேட்டாவது
நஞ்சுண்ட கண்டன்
இனியும் வரமாட்டானோ?
மீன் குஞ்சுகளுக்கும்
உயிர் தரமாட்டானோ?

வானமே கூரையாக வாழ்ந்து
வாழ்வாதாரம்
இதுவென்றே சாய்ந்திருக்கிறோம்

வாரத்தில் ஒரு நாள் மட்டுமே
பச்சை அரிசி சோறும்
ஆங்காங்கே
மீன்கள் தெறித்திருந்த புளித்தீயலும்
வாழ்விழந்து போன வாழ்வாதாரம்
இன்னும் வலுவிழந்திருக்கிறது
எங்களால்
எத்தனை முறை சாகமுடியும்
எங்களால்
எத்தனை வலிகளை சுமக்கமுடியும்

நந்திக்கடல் வாவியில் மிதந்தவை
மனித உடலங்கள் மட்டுமில்லை
உயிர் இழந்த மீன் குஞ்சுகளும்தான்

நெஞ்சில் நஞ்சு கலந்த
வஞ்சகவின மனிதா
மீன் குஞ்சுகளிலுமா நஞ்சு கலந்தாய்?

இறைவன் நின்று கொல்வான்
நிச்சயம்
அவன் இன்றே கொல்வான்
உனை
அவன் நன்றே கொல்வான்

**- ஞானம் / சூரியன் எப்.எம்.**

18

# நரபலிநாயகன்

இங்கே இருக்கும் எல்லாமும்
தனக்கே வேணும் என்கிறான்
எவை எவையோ
அவைபற்றிய எல்லாமும்
தனக்கே
தெரியுமென்று பிதற்றுகிறான்

தன் குடும்பம் மட்டுமே
நல்லதாகவும்
தன் உறவுகள் மட்டுமே
முதலாவதாகவுமிருக்க ஆசைப்படுகிறான்

இவையும்
அவனுக்கான
அசிங்க ஆர்வலங்கள்தான்!

தன் ஊர்

எக்கேடு கெட்டுப் போனால்

தனக்கென்ன.?

தாங்கள் மட்டுமே

நல்லதாக இருக்கிறோம் என்று

அவதிப்படுகிறான்

ஒருநேர வயிறு நிரப்பி

ஏப்பம் விட

ஏங்கித் தவித்திருக்கும்

தன் ஊரவர்பற்றி

அவனுக்கு

எந்தக் கவலையும் இல்லை

ஏனென்றால்

அவனும் அவர்களும்

நல்லாகவே இருக்கிறார்கள்

அவன் மீது

நிறைந்த குற்றங்களையும்

அவன் செய்த
பலமான கொடுமைகளையும்
ஊரவர்களும்
அயல்வர்களும்
அடுக்கடுக்காய் சொல்லுகின்றனர்

கடுமையாய் நின்று தாக்குகின்றனர்
அடம்பன் கொடியாய்
திரண்டு விரட்டுகின்றனர்

இனம் புரியாத பயப்பிதற்றல்கள்
அவனுக்குள் தோன்றி மறைகின்றன
உள்ளம் பதறுகிறான்

நானே
அவன் என்றும்!
நானே
இவன் என்றும்!
நானே
தேவன் என்றும் !

தானே
எல்லாம் தெரிந்தவன் என்றும்!
வாழ்ந்துவிட ஆசைப்படுகிறான்

முடிச்சிட்ட முழுமைச் சாவையும்
அதனால்
ஊருக்கான அவசர விடிவையும்
நீளமாகவே எதிர்பார்க்கின்றனர்
ஊரவர்களும்
ஊரில் அக்கறையான
அயலவர்களும்

இன்னும் சில காலங்களில்
ஊர்த்தலைமைப் பொறுப்பு
புடுங்கப்படலாம் என்றும்
உயிர் கூட
பறிக்கப்படலாம் என்றும்
அதீத பயங்களுடனேயே
உலவத் தொடங்கியிருக்கிறான்

பயங்களை

உள்ளுக்குள்ளே போர்த்து

நித்திரை விடுத்து

வாய் சவுடால்கள் விடும்

இவன் ஒரு நரபலிநாயகன்

**12.12.2012**

**- இது நம் தேசம்**

19

# சத்தியங்கள் செத்த பூமி இது

வியட்னாம் போர் ஒன்றில்
ஒன்பது வயது சிறுமி ஒருத்தி
ஆடையின்றி ஓடி வந்தாள்

வியப்புடன் விழிகளை விரித்து
உலகமே கண்ணீர் மழை சொரிந்தது

வியட்னாமில் எரிந்த
நீண்ட கால நெருப்பு யுத்தம்
முற்றுப்புள்ளிக்கு வந்தது

அமெரிக்க ரசிய அணு ஆயுத யுத்தம்
ஆரம்பிக்க இருந்த தருணங்களது

அமெரிக்கச் சிறுமி ஒருத்தி
ரசிய சனாதிபதிக்கு
இரங்கல் மடலொன்று வரைந்தாள்
அவளுக்கு வயது பதினொன்று

சிறுமியின் கடிதம் படித்து
கண்கலங்கி கசிந்து உருகினார்
ரசிய அதிபர்

அமெரிக்க அதிபருக்கும் தெரிவித்தார்
வெக்கப்பட்டு வேதனை பெருகி அழுதார்

இரு வல்லரசுகளின் பிரளய யுத்தம்
இருண்ட யுகத்தின் நீண்ட தவறு
சிறுமி ஒருத்தி
எடுத்துச் சொல்லி தடுத்திருக்கிறாள்
அணு ஆயுத யுத்த ஆயத்தங்கள்
நீறாகி கசங்கிச் செத்திருந்தன

அமெரிக்க சனாதிபதித் தேர்தலில்
போட்டியிட
காத்திருந்தார் ஏபிரகாம் லிங்கன்

சிறுமி ஒருத்தி
ஏபிரகாம் லிங்கனுக்கு
கடிதமொன்று வரைந்தாள்
அவளுக்கு வயது பத்து

அதுவொரு வேண்டுதல் கடிதம்
அவள் வேண்டுதல் வீண் போகவில்லை
நிறை மனதோடும்
நிறை அன்போடும் நிறைவேற்றினார்
ஏபிரகாம் லிங்கன் வெற்றி பெற்றார்

சிறுவர்கள்
வணக்கத்திற்குரியவர்கள்
சிறுவர்கள்
கடவுளுக்குச் சமமானவர்கள்

பாலகர்களின் ஈன நிலை கண்டு
துடித்துருகாதவனும்
துயர் கொள்ளாதவனும்
மனிதனேயல்லன்
அவன்
மனிதனேயல்லன்

சிறுவர் மனங்களில்
வஞ்சகங்கள் விதைக்கப்படுமே தவிர
அவர்களுக்குள் விளைவதில்லை
தீ முளைத்த எங்கள் தீவிலும்
சிறுவர்கள் இருந்தனர்
தீய நெஞ்சுடையோர் எரித்தனர்
சிறுதூர இடைவெளி வைத்துச் சுட்டனர்
சுழன்று விழுந்து செத்தனர்

தீக்கங்குகளாய் சிதைந்து
தணல் மணலாய் நீண்டு விரிந்தன
விழுந்த இரத்த நிலங்களில்

உடலங்கள்
செதிலங்களாய்ச் சிதறிக் கிடந்தன

அவர்களுள்
சின்னஞ்சிறுவன்
பாலச்சந்திரனும் ஒருவன்

வஞ்சகம்
சூது வாது
ஏதும் அறியாப் பாலகன்

அழகாய் மிரளும்
கண்கள் காணும் போது
உருகாதோர் உளமெலாம்
உருகி உறுமல் பெற்றிருக்க வேண்டும்

கொடியவர்களே
பால் வண்ண மைந்தனின்
பதுமைப் பார்வைகள் பார்த்துமா
உங்கள் நெஞ்சங்கள் ஈரமில்லாது போயின

இவன் நிலை கண்ட எவரும்
இரக்கம் கொண்டிருக்கவல்லவா வேண்டும்
இரக்கத்திலும்
இவன்
இவர் மகன் என்றல்லவா
பார்த்துள்ளீர்கள் நீங்கள்

காடையர்களே
புனித புத்தனின்
போதனை அத்தனையும் கற்றவர்கள்
என்று மார்பு தட்டி
வயிறு வளர்க்கும்
வீணர்கள் கூட்டங்கள்தானே
உங்கள் கூட்டம்

புத்தனை வணங்குவதை மறவுங்கள்
எவருக்காவது
புத்தனின் போதனைகள் போதிப்பதாயின்
அவற்றையும் நிறுத்துங்கள்
உம்மவரால்

புனிதம் கெட்டுப் போவது
உம்மவர் மட்டுமில்லை
வணக்கத்துக்குரிய புத்தனுக்கும்தான்

பாவம் புத்தர்
அவரையும்
அவர் போதனைகளையும்
விட்டு விடுங்கள்

இங்கு சத்தியங்கள்
நிறையவே செத்துக் கிடக்கின்றன

குரல் வளை நோக
இரத்த நாளங்கள் வெடிக்க
உரத்து முழங்கு எடா
உரத்து முழங்கு என்று
சத்தமிடுகிறோம் நாங்கள்!

**21.02.2013**

**- ஞானம் / இது நம் தேசம்**

20

# உழுத்த உடல்..! காகம்..!! சில நாய்கள்..!!!

அந்த உடல் உழுத்துப் போய்க் கிடந்தது
அது ஒரு மனித உடலாக இருப்பது மட்டுமன்றி
தமிழ் உடல்தான் என்பதற்கான சான்றுகளும்
அதிகமாகத் தென்பட்டன..!
அதில் தசைகள்
விராண்டியும் நோண்டியும் எடுக்கப்பட்டிருந்தன..!

மண்டை பிளந்து கிடந்தது
மூளை எடுத்து ருசி அறிந்திருப்பார்களாக்கும்..!
நாய்கள் நிறைந்து நிற்கின்றன
அந்த உடலின் ஒவ்வொரு பாகத்தின்
இறைச்சி தசையின் ருசியும்
இரத்த வெடுக்கின் நெடியும்
தனக்குத் தனக்கே சொந்தம் என நினைத்து
உறுமுகின்றன நாய்கள்..!
அவை ஒன்றை ஒன்று அச்சுறுத்திக் கடித்துக் கலைத்து
உரிமை கொண்டாடி சுவைக்க நினைக்கின்றன..!

அந்த உடலின் குதம் வழி வெளிவந்த ஒரு காகம்
நல்லாகவே கொழுத்திருந்தது
மெழுகு போல் கொழுத்திருந்த காகம்
அயல் எங்கும் தன் அருவருத்த பார்வைகளால்
சுற்றித் துளாவுதல் போட்டு விட்டு
பறந்து போனது..!

தைரியம் குறைந்த ஒரு மனிதன்
நிறை போதை வந்து நடந்தது போல்
தளம்பித் தளம்பிப் பறந்து போனது
அந்தக் கருங்கண்ணிக் காகம்..!

உழுத்த உடலின் எலும்புகளைக் கடித்து முறித்து
ருசி பார்த்துக் கொண்டிருந்தன சில நாய்கள்..!

நாய்கள் எப்போதும் அப்படித்தான்
தசைகள் இருப்பதை மறந்து விட்டு
எலும்புத் துண்டுக்காகவே
சண்டை பிடித்து உலையும் அல்லது சாகும்
பாவம் இந்த நாய்கள்..!

**- ஞானம்**

## 21

# ஒரு வயோதிபத்தின் பெருமூச்சு

எங்களுக்கு மட்டுமோ?
அவசரச் சட்டமும்
பயங்கள் நிறைக்கும் ரத்தக் குளிப்பும்
ஒருங்கிசைவாக உருக்குலைக்கின்றன

எங்களுக்காக என்று
குரல் பிதுக்கி சத்தம் செய்வோர்
தங்களுக்கான சுக இருப்பையும்
தங்களுக்கான உல்லாச உலகினையும் கண்டு
எங்கள் இருப்புகளை மறந்து விடுகிறார்கள்!

மறந்தால் பரவாயில்லை
ஓரம் கட்டியும்

உதாசீனம் செய்தும்
உருப்படியாகக் காட்டிக் கொடுத்தும்
இடையிடை கிழித்தெறிந்தும்
துப்பிப் பார்த்து அசிங்கப்படுத்தியும்
கோடாரிக் கூரினால்
நெஞ்சைப் பிளக்கின்றனர்..!

தேர்தல் காலச் சிரிப்புகளில்
காலம் பார்த்துப் பழகிய
என் போன்ற வயோதிபங்களுக்கும்
மீண்டும் ரோசம் துளிர்க்கத் தொடங்கிற்று.!

பொய் புரட்டு வஞ்சகம் சூது வாது பித்தலாட்டம்
பிடித்துத் தின்ற மனிதர்களின் மனங்களும்
அடிமைகளின் கல்லறைகளும் சமம் போலவே
எனக்குள் எழுந்த அருட்டுணர்வு
மனம் கிளித்துச் சொல்லிச் செல்கிறது..!

வயது போன நரைத்தலை ஒன்று
தன்னையும் தன் பரம்பரையினையும்
நல்லாக வைத்திருக்க நன்கு பழகியிருக்கிறது..!

தொளதொளத்த உடல் பருமனும்
கொஞ்சமும் நேர்த்தியில்லாத
வகிடு எடுக்காத குலைந்த நரைமுடியும்
பார்ப்பதற்கே அருவருப்பு வருகின்றது
தடம் புரளும் சாதனை மனம் அறியும் போது!
உண்மையாக..
நான் எங்கே இதைச் சொன்னேன்.? என்று
கேட்கத்தான் போகிறீர்கள்..!

என்ன தெரியுமோ.?
சுரண்டிப் பிழைப்போர்
அனாயசமாகவே அண்டிப் பிழைக்கின்றனர்
தொடக்கூடக் கூசும்
துடக்கு மனிதர்களின் பிஸ்டத்தில் தொங்கும்
அசிங்கத்தைத் துடைத்து
தங்கள் முகத்தைச் சுத்தம் செய்கின்றனர்!

கை கட்டி சேவகம் செய்யும்
இவ்வகை நஞ்சர்களைக் காணும் போதெல்லாம்
உண்மை நெஞ்சு வெடிக்கத் தொடங்குகிறது
கூண்டோடு விலையாகிப் போனோமோ?
என்பதை நினைக்கும் போது.!

நாங்கள் நம்பியிருந்த
நாங்கள் நம்பியிருக்கும்
இளையவனை நினைக்கும் போதுதான்
மறவர் குல பெருமை
மீண்டும் மீண்டும் நெஞ்சுக்குள் நிரம்பி வழிகிறது

இளையவன் தெய்வம் எடா.
எங்களுக்கெல்லாம் அவன்தான்
சரியான தொண்டன் எடா..!

இறைவா! இறைவா!! என்று
கையெடுத்து வணங்குவதைக் காட்டிலும்
இளையவா..! இளையவா!! என்று

சொல்லும் போதுதான் யாருக்கும்

ஒரு வீரம் வீரியமுடன் முளைக்கிறது!

என் எண்பது வயது அனுவத்தில் சொல்லுறன்

இளையவன் போல் ஒரு பிள்ளையை

இனி யாருமே கண்டிலர்!

இளையவன் எங்களுக்கெல்லாம்

இனியவன் எடா!

அவன்தான் எங்கள் தெய்வம் எடா!!

எட பொடியளா.!

நான் சொல்லுவது

இத்தனை கால அனுபவ உண்மை எடா!!

**- ஞானம்**

சமரபாகு சீனா உதயகுமார் சிறுகதை, கட்டுரை, குறுநாவல், விமர்சனம், கவிதை ஆகிய துறைகளில் எழுதிவருகின்ற போதிலும், அவரது கவிதைகளே அவரை முதன்மை இடத்துக்குக் கொண்டு செல்கின்றன என நான் கருதுகிறேன். அவரது இலக்கியக் கொள்கை, சமுதாயப் பார்வை, மனித மேம்பாட்டிற்கான அவரது சிந்தனைப் போக்கு போன்றவற்றை அவரது கவிதைகளில் தரிசிக்க முடிகிறது. அந்தவகையில் அவர் கவனத்துக்குரிய புதிய தலைமுறைக் கவிஞராகிறார்.

"என் பேனாவின் நிதர்சனம்" என்ற சமரபாகு சீனா உதயகுமாரின் இந்தக் கவிதைத் தொகுதியில் உள்ள இருபத்தொரு கவிதைகளில் அனேகமான கவிதைகள், "ஞானம்" சஞ்சிகையில் பிரசுரமானவை. ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் என்ற நிலையில் இக்கவிதைகளை நான் ஏற்கனவே உதிரியாக வாசித்திருக்கிறேன். தற்போது மீண்டும் ஒரு தொகுப்பாக ஒன்று சேர வாசிக்கும் போது இக்கவிதைகளில் ஒரு பொதுமைப்பாட்டைக் காணமுடிகிறது. அதேவேளை இக்கவிதைகளின் பாடுபொருட்களை வகுத்தும் தொகுத்தும் சில பரிமாணங்களை நோக்க முடிகிறது.

இவரது கவிதைகளில் படாடோபப் பகட்டு இருப்பதில்லை. சிக்கனமான விரயம் செய்யாத வெளியீடு. அலங்காரப் பகட்டில்லாத எளிமை. சக்தி வாய்ந்த சொற்பிரயோகங்கள். மொத்தத்தில் இவர் நல்லதோர் கவிஞராக மலர்ந்துள்ளார்.

- டாக்டர் தி.ஞானசேகரன்
பிரதம ஆசிரியர் "ஞானம்"

இலக்கியத்தின் மீதான அதீத ஆர்வம், அயராத தேடல், இலக்கிய வாதிகளுடனான உண்மையான நேசிப்பு போன்ற உயர்ந்த பண்புகளே உதயகுமார் எனும்போது முதலில் என் மனதில் எழுவது.

இத்தகு அம்சங்களுடன் கூடிய இவரது ஆற்றலே "பகிர்வு" எனும் இவரது முன்னைய நூலிற்கு ஓர் இலக்கிய அந்தஸ்தினை ஏற்படுத்திய எனலாம்.

அந்த வகையில்... இந்நூலும் இவரது இலக்கியப் பயணத்தில் ஓர் பாய்ச்சல் எனத் தாராளமாகவே கூறலாம்.

- புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

ISBN 978-955-53921-6-7

9 789555 392167

மீரா பதிப்பக வெளியீடு – 101